பக்கங்கள்:-23

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 03 | புதன்கிழமை | 16.04.2025 | அதிர்வு 254

# புதிய அரசமைப்பு மூலம் நிரந்தர தீர்வு கிடைக்கும்

## நீதி அமைச்சர் உறுதி



“புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 07

# என்.பி.பி. அரசின் ஏமாற்று வித்தைகளுக்கு இந்தத் தேர்தல் சரியான பாடத்தைப் புகட்டும்

## இப்படி முன்னாள் எம்.பி. சுரேஷ் நம்பிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

“தமிழ் மக்களுக்கோ – சிங்கள மக்களுக்கோ கடந்த தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் என்.பி.பி. அரசு நிறைவேற்றவில்லை. எனவே, என்.பி.பியின் ஏமாற்று வித்தைகளுக்கு இந்தத் தேர்தல் சரியான பாடத்தைப் புகட்டும் என நம்புகின்றேன்.”

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவர்களில் ஒருவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 06





# தமிழ் மக்களை எம்மிடம் இருந்து பிரிக்கவே முடியாது!

## அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டம்

**“வடக்கு தமிழ்க் கட்சியினர் எம்மை விமர்சிப்பதால் அவர்கள் எதனையும் சாதிக்க முடியாது. இந்த விமர்சனங்களால் எமது பக்கம் வந்துள்ள தமிழ் மக்களைத் தமது பக்கம் மீண்டும் இழுக்க தமிழ்க் கட்சியினரால் முடியாது.”**

**- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.** 06

### நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் இருவேறு தீர்ப்புக்கள்:

# உயர்நீதிமன்றத்தை நாடி தீர்வைப் பெற்றுத் தருக!

## சட்டமா அதிபரிடம் சுமந்திரன் வலியுறுத்து

“உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களில் பிறப்புச்சான்றிதழ் அத்தாட்சிப்படுத்தல் மற்றும் சத்தியக் கடதாசி குறைபாடுகள் என்பவற்றுடன் தொடர்புடைய வகையில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் உயர்நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றமும் இருவேறு தீர்ப்பக்களை வழங்கியிருக்கும் நிலையில், இது சமச்சீரற்ற தேர்தலொன்று நடைபெறுவதற்கான வாய்ப்பைத் தோற்றுவித்திருக்கின்றது. எனவே, இது குறித்து சட்டமா அதிபர் உடனடியாக உயர்நீதிமன்றத்தை நாடி உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்.” 06






உள்ளூராட்சித் தேர்தலுக்கு இன்னமும் 20 நாள்கள் கூட இல்லை. அடுத்து வரும் தினங்களில் தபால் மூல வாக்களிப்பை நடத்த வேண்டும்.

ஆனால் தேர்தல் தொடர்பில் மக்களும் நாடும் உச்ச குழப்பத்தில் இருக்கிறார்கள். எந்தெந்த உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடக்கும், எவற்றுக்கு நடக்காது, பிற்போடப்படும், பிற்போடப்படும் இடங்களுக்கான புதிய தேர்தல்கள் எப்போது – இவை பற்றி எல்லாம் மக்கள் உச்சக் குழப்பத்தில் இருக்கிறார்கள். மக்கள் அத்தகைய குழப்பத்தில் என்று பார்த்தால் அதையும் தாண்டிய குழப்பத்தில் தேர்தல் ஆணையம் இருப்பதாகத் தெரிகிறது.

அதனுடைய பிந்திய அறிவிப்பு அது எத்தகைய குழப்பத்தில் இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகின்றது.

வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து ஆக இரண்டு நீதிமன்றங்களில் தான் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. ஒன்று – உயர் நீதிமன்றம். மற்றது – மேன் 06



# யாழ். திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை மாநகர சபை விரைந்து பெறுபேற்க வேண்டும்

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் கட்டப்பட்டு இந்திய அரசாங்கத்தால் பராமரிப்புச் செய்யப்பட்டு வருகின்ற யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை, யாழ்ப்பாணம் மாநகர சபை, எதிர்காலத்தில் இயக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தின் பராமரிப்புக்குரிய பொறுப்பை இந்திய அரசாங்கம் 5 ஆண்டுகளுக்கு ஏற்றிருந்த நிலையில் அதில் 4 ஆண்டுகள் வரையில் நிறைவு பெற்றுள்ளதாகவும், எதிர்காலத்தில் யாழ். மாநகர சபை அதனைக் கொண்டு நடத்துவதற்குரிய ஒழுங்குகளை முன்னெடுப்பதற்காகக் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் குறிப்பிட்டார். எவ்வளவு விரைவாக இதனை மாநகர சபையே பொறுப்பேற்று இயக்க முடியுமோ அதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என்றும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இந்தியத் துணைத்தூதுவர் கருத்து வெளியிடுகையில், இந்தக் கலாசார மண்டபத்தை இயக்குவதற்கான இணை முகாமைத்துவக் குழுவின் கூட்டம் 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் நடத்தப்படவில்லை என்றும், அது எவ்வளவு விரைவாக இடம்பெறுகின்றதோ, அதற்கு அமைவாகவே ஏனைய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இணை முகாமைத்துவக் குழுவை உள்ளூரை மையப்படுத்தியதாக உருவாக்குவது சிறப்பாக இருக்கும் என்றும், அத்துடன் இந்தியத் தூதரகம் ஆலோசனை வழங்கும் ஒரு தரப்பாகவே எதிர்காலத்தில் இருக்கும் எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் கலாசார மண்டபத்தின் ஒவ்வொரு மாடிக் கட்டடத் தொகுதிக்குமான பல்வேறு விதமான முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இது சாதகமானதொரு நிலைமை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது இந்தியத் தூதரக அதிகாரிகளே பராமரித்து வரும் நிலையில் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக யாழ். மாநகர சபையால் அதிகாரிகளை நியமிக்குமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.


மேலும், இணை முகாமைத்துவக் குழுவின் கூட்டத்தை விரைவாக கூட்டுவதற்கு ஏதுவாக மத்திய அரசாங்கத்தின் கலாசார அமைச்சுக்கு உடனடியாகக் கடிதம் அனுப்புமாறும் ஆளுநர் பணித்தார்.

கலாசார மண்டபம் யாழ். மாநகர சபையால் முழுமையாக இயக்கப்பட்ட பின்னர் அதில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பான திட்டமிடல்களை முன்னெடுக்கலாம் என இந்தியத் தூதரக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் – நிர்வாகம் திருமதி எழிலரசி அன்ரன்யோகநாயகம், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் – நிதி எஸ்.குகதாஸ், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, யாழ். மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் மற்றும் இந்தியத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# வாக்காளர் அட்டைகள் இன்று அஞ்சல் திணைக்களத்திடம்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இன்று அஞ்சல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுமெனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தநிலையில் குறித்த தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் ஏற்கனவே அஞ்சல் திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், சுமார் 250 உள்ளூராட்சி நிறுவனங்களில் திட்டமிட்டபடி மே மாதம் ஆறாம் திகதி தேர்தல் நடைபெறும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.






# பசுக்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

உயர்தர கறவை பசுக்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து இனப் பெருக்க பண்ணைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மாகாண மட்டத்தில் இனப்பெருக்கப் பண்ணைகளை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.




# உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்கெடுப்பு தாமதம்

கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட 18 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்கெடுப்பு தாமதமாகும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்காக எதிர்வரும் மே 06ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படுவதைத் தடுத்து பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவினால் தபால்மூல வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஆணைக்குழு அறிவித்தது.

தற்போது குறித்த வழக்கின் தீர்ப்பை ஆய்வு செய்து அரச அச்சகத்திற்கு அறிவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

227 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகளை விநியோகிக்கும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்கெடுப்பை எதிர்வரும் 22, 23, 24 ஆகிய தினங்களில் நடத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த தினங்களில் வாக்களிக்க முடியாத வாக்காளர்கள் ஏப்ரல் 28 மற்றும் 29 ஆகிய தினங்களில் வாக்களிக்க முடியும்.

# தூக்கில் தொங்கிய நிலையில் வயோதிபரின் சடலம் நேற்று மீட்பு

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். வடமராட்சி, பொலிகண்டி கிழக்கில் நேற்று செவ்வாய்க்கிழமை தூக்கில் தொங்கிய நிலையில் வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் அரிபரநிதி (வயது 73) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் நெறிப்படுத்தினார்கள்.









# ஒட்டுசுட்டான் உணவகங்களில் சோதனை நடவடிக்கைகள்

(பா.சதீசன்)

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதியில் மனித நுகர்விற்கு பொருத்தமற்ற வகையில் இருந்த வெதுப்பக உற்பத்தி பொருள்கள் சுகாதார பரிசோதகர்களால் அழிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட முத்தையன்கட்டு மற்றும் ஒட்டுசுட்டான் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் உள்ள உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்கள் நேற்று சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன் போது வெதுப்பகங்கள் மற்றும் உணவகங்களில் அடையாளம் காணப்பட்ட மனித நுகர்விற்கு பொருத்தமற்ற வகையில் இருந்த வெதுப்பக உற்பத்திப்பொருள்கள், அழிக்கப்பட்டதுடன், வெதுப்பகங்களில் உள்ள சுகாதார சீர்கேடுகள் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றுக்கான உரிய தீர்வுகளும் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் முன்மொழியப்பட்டன.

அத்துடன், உரிய வெதுப்பக உரிமையாளருக்கு சுகாதார சீர்கேடுகளை நிவர்த்தி செய்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முறையீட்டு நீதிமன்றம்.

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் முழு விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டு விட்டன.

ஆக, மேன்முறையீட்டு நீதிமன்றம் தன்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்தாணை மனுக்களின் அடிப்படையில் சுமார் 80 கட்சிகள் அல்லது சுயேச்சை குழுக்களின் வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவு விட்டிருக்கின்றது.

ஒரு நீதிமன்றம், ஒரு தரப்பு – அதாவது தேர்தல் ஆணையத் தரப்பு – அதற்கான சட்டத்தரணியாக சட்டமா அதிபர் திணைக்களம். இவ்வளவும் இருந்தால் தேர்தல் வேட்பு மனுக்கள் ஏற்புத் தொடர்பாக அந்த நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளை தேர்தல் ஆணையம் பெற்று, அதன்படி செயல்படுவதில் என்ன சிக்கல் இருக்க முடியும்?

வேட்புமனு நிராகரிப்புத் தொடர்பாகத் தங்களுக்கு எதிராக வழக்குப் போட்ட தரப்புக்களை – அதாவது கட்சிகல் மற்றும் சுயேச்சைக் குழுக்களை – அவர்களது எழுத்தாணை மனுக்கள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகளின் பிரதிகளுடன் தத்தமது மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் எடுத்து வந்து வழங்குமாறு தேர்தல் ஆணையம் அறிவிப்பு வழங்கியிருக்கிறது.

அதாவதுநீதிமன்றத்தில்தான்எதிர்மனுதாரராக இருக்கும் வழக்குகளின் உத்தரவுப் பிரதிகளை அல்லது தீர்ப்புகளை அல்லது வழிகாட்டுதல்களை நேரடியாகத் தானே பெற்று, தனது தெரிவத்தாட்சி அலுவலருக்கு வழங்கி, அவர் மூலம் அதை நடைமுறைப்படுத்தச் செய்ய வக்கில்லாத காரணத்தினால், சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து நீதிமன்ற உத்தரவு பிரதிகளை கோருகிறது தேர்தல் ஆணையம்.

அது,எத்தகைய குழப்பத்தில் இருக்கின்றது என்பதை நிரூபிக்க அதன் இந்தப் பிந்திய உத்தரவு ஒன்றே போதுமானது என நினைக்கிறேன்.

\+ + +

நகைச்சுவை நடிகர்கள் கவுண்டமணி – செந்திலின் வாழைப்பழக் கணக்கு ஜோக் – 'அதுதான் இது!' என்ற சுத்துமாத்து – பலருக்கும் தெரிந்ததுதான்.

இப்போது பொதுவாழ்வில் இருக்கும் ஜகதலப்பிரதாபன்கள் தங்களின் சுத்துமாத்துக்குப் பெரும்பாலும் இந்த வாழைப்பழக் கணக்கு முறையைத்தான் அதிகம் பயன்படுத்துகிறார்கள்.

ஒரு கணக்கில் வரும் வேலையை அந்தக் கணக்கில் செய்து முடித்து விட்டு, இன்னொரு கணக்கிலும் அதே வேலையை செய்து முடித்ததாகக் காட்டி நிதியைச் சுருட்டி கொள்வார்கள்.

அப்படிப்பட்ட ஜகதலப்பிரதாபன் ஒருவரை ஆளுங்கட்சி தீவுப் பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளராக நிறுத்தி இருக்கின்றது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஊழல் செய்ய மாட்டோம், ஊழல் செய்தவர்களை தப்பிக்க விடவும் மாட்டோம் என்று பறைசாற்றிக் கொண்டு அவர்கள் வடக்கில் தேடிப் பிடித்த பலர் ஊழல் பேர்வழிகள் என்பதுதான் வினோதம்.

தீவுப்பகுதி வைத்தியசாலை ஒன்றில் அரச நிதியில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கியை சுவிஸில் உள்ள ஈழத்தமிழர்கள் நலன்புரிக் குழுவிடமும் காண்பித்து நிதியைச் சுருட்டியவர் இம்முறை ஆளும் தரப்பில் வேட்பாளர்.

உலக வங்கியின் முழு உதவியில் முழுமையாக மாகாண சுகாதார அமைச்சால் நிதி விடுவிக்கப்பட்டு நீர்த்தாங்கி அமைக்கப்பட்டது. வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கம் அதை அமைப்பதற்கான ஒப்பந்தத்தைப் பெற்று கட்டுமானத்தை அமைத்துள்ளது.

அந்த ஒப்பந்தப் பணியை தமது நிதியில் மேற்கொள்வதாக சுவிஸ் அமைப்பிற்குக் காண்பித்து நலன்புரிச் சங்கத்தின் செயலாளர், அப்பணிக்கு சுவிஸில் இருந்தும் 8 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார். இதனால் அமைக்கப்பட்ட நீர்த் தாங்கியில் சுகாதார அமைச்சினதும் சுவிஸ் அமைப்பினதும் பெயர்கள் கல்வெட்டில் பொறிக்கப்பட்டன.

இந்த விடயம் ஆளுநர் செயலகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதனால் விடயம் ஆராயப்பட்டது. முழுமையான நிதியும் சுகாதாரத் திணைக்களமே வழங்கியது, எனவே சுவிஸ் அமைப்பின் பெயருள்ள கல்வெட்டை நீக்குங்கள் என எழுத்தில் ஆளுநர் செயலகம் பணித்ததால் கல்வெட்டு அகற்றப்பட்டது. மோசடியும் அம்பலமானது.

இந்த மோசடியின் பிரதான சூத்திரதாரியே – நலன்புரிச் சங்கத்தின் செயலாளரே – அப்பகுதியின் ஆளும் தரப்பு வேட்பாளர் எனச் சுட்டிக் காட்டுகின்றனர் அந்தப் பகுதி நலன்விரும்பிகள் சிலர்.

ஆளும்தரப்பு உருப்பட்ட மாதிரித் தான்.....!

## என்.பி.பி. அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி தேர்தல் காலத்திலும் அதற்கு முன்னரான காலத்திலும் அதே போன்று நாடாளுமன்றத் தேர்தல் காலத்திலும் என்.பி.பி. என்று சொல்லக்கூடிய ஜே.வி.பி. வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கின்றார்களா?

அதேபோன்றே தாம் ஊழலுக்கு எதிரானவர்கள் எனக் கூறியும் நாட்டை நாசமாக்கிய ஊழல் பெருச்சாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த பின்னர் அவர்கள் எடுத்து நடவடிக்கை என்ன?

மேலும் இனவாதம், மதவாதம் இல்லை எனக் கூறிக் கொண்டு ஆட்சிப் பீடத்துக்கு வந்த அநுர தரப்பினர் இப்போது இனவாத, மதவாத ரீதியாகவே செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக தமிழ் மக்கள் விடயத்தில் காணி விடுவிப்பு, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம், அரசியல் கைதிகள் விடுதலை எனத் தேர்தலுக்கு முன்னர் கூறியவர்கள் இப்போது ஆட்சிக்கு வந்து 6 மாதங்களுக்குள் செய்தது என்ன?

இவ்வாறான நிலையில்தான் "நாடும் நமதே ஊரும் நமதே" என்று சொல்லிக் கொண்டு அவர்கள் வந்திருக்கின்றனர். இவர்களின் இத்தகைய ஏமாற்று வித்தைகளையும் பித்தலாட்டங்களையும் எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும் எத்தனையோ தியாகங்கள், இழப்புக்களுக்கு மத்தியில் கிடைக்கப் பெற்ற அதிகாரங்களை மீளவும் மத்திக்கு வழங்குவது பெரும் ஆபத்து. ஏற்கனவே இழைத்த தவறு போல் இனியும் எமது மக்கள் செய்யக்கூடாது.

எனவே, தமிழ் மக்கள் அந்தத் தவறை உணர்ந்து அநுர தலைமையிலான இந்த ஆட்சியாளர்களின் ஏமாற்று வித்தைகளுக்கு இடமளிக்காது சிந்தித்துச் செயற்பட வேண்டியது அவசியமானது.

ஆகவே, வடக்கு, கிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் மக்கள் அல்லது முஸ்லிம் மக்களாக இருக்கலாம் ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜே.வி.பியின் வெருட்டல், உருட்டல் எல்லாத்தையும் பார்த்தவர்கள் நாங்கள். ஆகையினால் எதைக் கண்டாலும் எமக்குப் பயம் இல்லை. இந்த என்.பி.பி. யார் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும்.

அமைச்சர் சந்திரசேகர் அவர்களே உங்களது இந்த மிரட்டல் எல்லாம் தமிழ் மக்கள் மத்தியில் எடுபடாது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். நாங்கள் பலவற்றைப் பார்த்தவர்கள். இத்தகைய வெருட்டல், உருட்டல்களை அமைச்சர் நிறுத்த வேண்டும்." – என்றார்.

## தமிழ் மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"வடக்கு தமிழ் மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அமோக ஆதரவை வழங்கியுள்ளார்கள். இந்நிலையில் அந்த மக்கள், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் எமது கட்சிக்கு ஆதரவு வழங்குவதைத் தடுக்கும் வகையில் வடக்கு தமிழ்க் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் என்று சொல்லப்படுபவர்கள், நான் உள்ளிட்ட எமது கட்சியின் உறுப்பினர்களைத் தற்போது விமர்சித்து வருகின்றார்கள்.

இந்த விமர்சனங்களால் அவர்கள் எதனையும் சாதிக்க முடியாது. எமது பக்கம் வந்துள்ள தமிழ் மக்களை தமது பக்கம் மீண்டும் இழுக்க அவர்களால் முடியாது. ஏனெனில் வடக்கு தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்கின்றார்கள்.

இந்த மக்களின் அரசியல், பொருளாதார ரீதியிலான கோரிக்கைகளை நாம் நிறைவேற்றுவோம். எம்மை நம்பி வரும் மக்கள் எவரையும் நாம் கைவிட மாட்டோம்." – என்றார்.

## உயர்நீதிமன்றத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது கட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களில் மாந்தை மேற்கு பிரதேச சபையிலே தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு மாத்திரம் ஆரம்பத்தில் நிராகரிக்கப்பட்டிருந்தது.

அதற்கு எதிராக நாம் உயர்நீதிமன்றத்தில் எழுத்தாணை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தோம். அவ்வாறு மேலும் பலர் எழுத்தாணை மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார்கள்.

இருப்பினும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிரானதாக இருந்தால் அதற்குரிய எழுத்தாணை மனு உயர்நீதிமன்றத்திலும், தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு எதிரானதாக இருந்தால் அதற்குரிய எழுத்தாணை மனு

07

## உயர்நீதிமன்றத்தை...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் மனுதாரர்கள் இரண்டு நீதிமன்றங்களுக்கும் சென்று நிவாரணங்களைப் பெற்றிருக்கின்றார்கள்.

ஆனால், இம்முறை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பில் ஒரு பூர்வாங்க ஆட்சேபனை எழுப்பப்பட்டபோது, இம்மனுக்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களின் தீர்மானம் தொடர்பானது என்பதால் அது குறித்து ஆராய்வதற்கான நியாயாதிக்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கே இருப்பதாகக் கூறி உயர்நீதிமன்றம் அந்த வழக்குகளை நிராகரித்தது.

அவ்வாறு நிராகரித்தவுடனேயே நாங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் சென்று எமக்கான நிவாரணத்தைப் பெற்றுவிட்டோம். அதன்படி நாம் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கும் போட்டியிடுகின்றோம்.

அதேவேளை மேலும் சிலர் உயர்நீதிமன்றத்திலோ அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்திலோ எழுத்தாணை மனுக்களைத் தாக்கல் செய்யாமல், உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றார்கள்.

அடிப்படை உரிமை தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் உயர்நீதிமன்றம், அந்த வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

அதன்படி பிறப்புச்சான்றிதழ் உரியவாறு அத்தாட்சிப்படுத்தப்படாதவர்கள், சத்தியக்கடதாசியில் குறைபாடு உடையவர்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை சரியானதே என உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது.

இருப்பினும் இதே காரணத்துக்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில், இக்காரணங்களுக்காக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தவறு எனவும், அந்த வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே, இந்த விடயத்தில் உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்புக்கும், மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்புக்கும் இடையே நேரடி முரண்பாடு காணப்படுகின்றது.

இதனை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு சட்டமா அதிபருக்கு இருக்கின்றது. அவர்தான் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்காகவும், தெரிவத்தாட்சி அலுவலர்களுக்காகவும் நீதிமன்றத்தில் ஆஜராகினார்.

ஆகவே, சட்டமா அதிபர் இதனை உடனடியாக உயர்நீதிமன்றத்துக்குக் கொண்டுசென்று சீரமைக்க வேண்டும். ஏனெனில் தற்போது சமச்சீரற்றதொரு முறையிலேயே தேர்தல் நடைபெறக்கூடிய நிலை காணப்படுகின்றது.

ஆகையினால் இந்தக் குழப்பத்துக்கு சட்டமா அதிபர் விரைந்து தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்." – என்றார்.

## புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குப் புதிய அரசமைப்பின் ஊடாக முரண்பாடற்ற நிரந்தர தீர்வை நிச்சயம் பெற்றுக்கொடுப்போம்."

– இவ்வாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். இந்தச் சட்டத்துக்கு எதிராகவே நாங்கள் செயற்பட்டோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கும், நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் புதிய சட்டத்தை இயற்றுவதற்கும் கடந்த அரசுகள் மேற்கொண்ட பணிகள் குறித்து தீவிர கரிசனை கொண்டுள்ளோம்.

தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பு தொடர்பான சட்டம் இயற்றப்படும். நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வது தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன தலைமையில் நியமிக்கப்பட்ட குழு கடந்த வெள்ளிக்கிழமை கூடியது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வது அரசின் கொள்கை. ஆகவே, இந்தச் சட்டத்தை இரத்துச் செய்து, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை முன்னிலைப்படுத்தும் வகையில் புதிய சட்டத்தை உருவாக்குவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்பதை குறித்த குழுவின் முன்னிலையில் வெளிப்படுத்தியுள்ளேன்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு புதிய அரசமைப்பின் ஊடாக நிரந்தர தீர்வை நிச்சயம் பெற்றுக்கொடுப்போம். காலம் காலமாக தொடரும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவே வடக்கு, கிழக்கு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குச் சிறப்பு ஆணை வழங்கியுள்ளார்கள்.

பொருளாதார ஸ்திரப்படுத்தலுடன் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாகாண சபைத் தேர்தலை நடவத்துவதற்கும் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்." – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வடக்கும் - தெற்கும்!

முன்னைய காலத்தில் தேசிய மட்டத் தேர்தல்கள் என்றால் நாடு அல்லோல கல்லோலப்படும். களேபரங்கள் இடம் பெறும். வன்முறைகள் வெடிக்கும். அதுவும் ஆளுங்கட்சியின் அராஜகம் எல்லை மீறும். தேர்தலில் ஆட்சி மாற்றங்கள் நேர்ந்தால், அந்தக் கையோடு வன்முறைகள் வெடிக்கும். அதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த தரப்புக்கள் பழிவாங்கப்படும். இது இலங்கையின் பழைய சரித்திரம்.

ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது. கடந்த ஆண்டு இரண்டு தேர்தல்களின் போதும் - ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் இரண்டின் போதும் - பெரும் களேபரங்கள், வன்முறைகள், குழப்பங்கள் ஏற்படலாம் என்று பரவலாக சந்தேகிக்கப்பட்டது. ஆனால் தெய்வாதீனமாக அத்தகைய சம்பவங்கள் ஏதும் ஏற்படவில்லை. ஆட்சி - அதிகார - மாற்றங்கள் நேர்ந்த போதும் அவற்றின் பின்னர் குழப்பங்கள் ஏற்படாமல் கட்டுப்படுத்துவதில் அநுரகுமார திஸநாயக்கவும் அவரது அதிகார பீடமும் கரிசனையாக இருந்தமை மறுக்கக் கூடியது அல்ல.

இப்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் இதுவரை பெரும்பாலும் அமைதியாக நடைபெற்று வருகின்றன என உள்ளூர் தேர்தல் கண்காணிப்பு அமைப்புத் தெரிவித்துள்ளது.

சுமார் 71,000 பேர் போட்டியிட்ட போதிலும், தேர்தல் தொடர்பான 200 முறைப்பாடுகள் மட்டுமே பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளன என சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் நடவடிக்கை ('பவ்ரல்') அமைப்பின் நிர்வாக இயக்குநர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி கூறுகிறார்.

இதுவரை சுமார் 13 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று அவர் மேலும் கூறினார். வேட்பாளர் ஒருவர் தாக்கப்பட்டமையை அடுத்து ஒருவர் கைது செய்யப்பட்டார் என அவர் கூறினார்.

பொலிஸாரின் கூற்றுப்படி, இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளின் அடிப்படையில் மொத்தம் 15 வேட்பாளர்கள் மற்றும் 52 அரசியல் கட்சி ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புகார்களை விரைவாகக் கவனித்து அவற்றைத் தீர்த்தமைக்காக பொலிஸாரை ரோஹண ஹெட்டியாராச்சி பாராட்டினார்.

முந்தைய கணிப்புகளுக்கு மாறாக, சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டு காலத்தில், பெரிய சம்பவங்கள் அல்லது வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுக்க முயற்சிகள் எதுவும் பதிவாகவில்லை என்றும் அவர் கூறினார்.

தென்னிலங்கையில் இந்த நிலைவரம் என்றால் வடக்கிலோ நிலைமை தலைகீழ். வழமைக்கு மாறாக வடக்கில் தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பாக அதிக எதிர்ப்பு - குறிப்பாக ஆளும் தரப்புக்கு எதிராக - வெளியிடப்பட்டு வருகின்றது.

பிரதமர் ஹரிணி அமரசூரியவின் யாழ் வருகையையொட்டி இடம்பெற்ற தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் தேர்தல் விதிமுறை மீறல்கள் தாராளமாக இடம்பெற்றன என வடக்கு அரசியல்வாதிகள் பலரும் குற்றச்சாட்டுகளை அடுக்கி வருகின்றனர். அதுவும் ஆளும் தரப்பில், வடக்கை மையமாகக் கொண்டு செயற்பட்டு வரும் அமைச்சர் சந்திரசேகரன் ரவுடித்தனமான முறையில் அரசியல் பிரசாரங்களை முன்னெடுக்கின்றார் என்ற சாரப்பட தமிழர் தரப்பின் முக்கிய கட்சியான தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் பகிரங்கமாகக் குற்றம்சாட்டும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகள், தேர்தலை ஒட்டி வாக்குகளை விலைக்கு வாங்குதல், தேர்தல் விதிமுறை மீறல்கள் போன்றவற்றுக்கு இடமே அளிக்க மாட்டோம் எனத் தேசிய மக்கள் சக்தி அரசு தென்னிலங்கையில் கூறிக் கொண்டிருக்க, அதன் பிரதிநிதிகள் வடக்கில் அதற்கு எதிராக - அரசின் நிலைப்பாட்டிற்கு மாறாக - குதியம் குத்திக் கொண்டிருக்கின்றார்களோ என்று சந்தேகிக்கப்படக்கூடிய சூழ்நிலைதான் வடக்கில் தேர்தலை ஒட்டி நீடிக்கிறது என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

அரசுத் தலைவர் தமது தரப்பில் விசேட கவனம் எடுத்துத் திருத்தங்களைச் செய்ய வேண்டிய விவகாரம் இது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.



# இன்பர்சிட்டி காண்டீபன் கழகத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு நிகழ்வுகள்

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு இன்பர்சிட்டி காண்டீபன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு நிகழ்வுகள் நேற்று முந்தினம் சிறப்பாக இடம்பெற்றன.

இதன்போது கிறிஸ் கம்பம் ஏறுதல், முட்டி உடைத்தல், ஆண்கள், பெண்களுக்கான மெதுவான சைக்கிள் ஓட்டம், பெண்களுக்கான தேங்காய் துருவுதல், சமநிலை ஓட்டம் உள்ளிட்ட விளையாட்டுகளில் அவ்வூர் இளைஞர், யுவதிகள் உள்ளிட்டோர் ஆர்வமுடன் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.





















# மீசாலை நகுலன் சனசமூக நிலையத்தின் தமிழர் கலை கலாசார பண்பாட்டு விழா!

தமிழர் பண்பாட்டு கிராமிய விளையாட்டு நிகழ்வு நேற்று மீசாலை நகுலன் னசமூக நிலைய மைதானத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

சுமார் 30 ஆண்டுகளின் பின் மீள் குடியமர்த்தப்பட்ட இந்த மக்களின் முதலாவது கலை கலாசார பண்பாட்டு விழாவாக இவ் விழா அமைந்துள்ளது. இதன் போது சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், கிடுகு இழைத்தல், சங்கீதக் கதிரை, ஆண், பெண் இரு பாலாருக்குமான கயிறிழுத்தல், தலையணைச் சண்டை முட்டியுடைத்தல் போன்ற சுவாரசியமான விளையாட்டுக்களும் இடம்பெற்றிருந்தன.

நகுலன் சனசமூக நிலைய தலைவர் மகாலிங்கம் மதுஷன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மன்னார் மாவட் அரசாங்க அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரன் மற்றும் வைத்தியர் சிவசாதனா தினேஸ், வைத்தியர் வினாசித்தம்பி கஜீபன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களையும் வழங்கி கௌரவித்தனர்.



















# விளையாட்டுக்களில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அருகி வருகின்றது!

## வடக்கு ஆளுநர் வேதனையுடன் தெரிவிப்பு

"இன்றைய பிள்ளைகள் பாடசாலை முடிந்தவுடன் ஒன்றில் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றனர். இல்லையேல் அலைபேசியுடன் வீட்டில் மூழ்கிக் கிடக்கின்றனர். விளையாட்டு மைதானத்தை எட்டிப் பார்ப்பது அருகி வருகின்றது."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வேதனை வெளியிட்டார்.

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகமும் பொதுமக்களும் இணைந்து நடத்தும் புதுவருட விளையாட்டு விழா – 2025, இரண்டாம் நாள் நிகழ்வு வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக வடபுல மைதானத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை மாலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் உள்ளிட்ட விருந்தினர்கள் கலாசார முறைப்படி வரவேற்கப்பட்டனர்.

மேடை நிகழ்வுகள் அதனைத் தொடர்ந்து நடைபெற்றன. ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில்,

"விளையாட்டுக்கள் பொழுதுபோக்குக்கு மாத்திரம் உரியவை அல்ல. அவை எங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும், தலைமைத்துவத்தை மேம்படுத்திக்கொள்வதற்கும் பெரிதும் உதவுகின்றன. சிறந்த விளையாட்டு வீரர்களிடம் மற்றையவர்களை மதிக்கும் பண்புகளையும் காணலாம்.

ஆனால் துரதிஷ்டவசமாக எமது பிரதேசங்களில் விளையாட்டுக்களில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அருகி வருகின்றது. பல ஊர்களில் இருந்த விளையாட்டுக் கழகங்கள் இன்று செயற்றிறன் இழந்திருக்கின்றன. ஆனால், உங்கள் விளையாட்டுக் கழகத்தில் இரவு நேரத்திலும் விளையாட்டுப் பயிற்சிகள் முன்னெடுக்கப்படுவது பாராட்டுக்குரியது.

இன்றைய இளைய சமூகத்தின் மத்தியில் சமூகப்பிறழ்வு அதிகரித்துச் செல்கின்றமைக்கு, விளையாட்டுக்களில் பங்கேற்காமை பிரதான காரணமாகும். இந்தப் பிரதேசத்து இளையோர் அதிகளவில் விளையாட்டுக்களில் கவனம் செலுத்துவதால் சமூகப்பிறழ்வுகளில் ஈடுபட்டதாக எந்தவொரு முறைப்பாடும் இல்லை என உங்கள் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் சொல்லியிருந்தார். உண்மையில் விளையாட்டுக்களிலும், கலைச் செயற்பாடுகளிலும் இளையோர் நாட்டம் செலுத்தினால் சமூகப்பிறழ்வுகள் எவ்வளவோ குறைவடையும்.

உங்களது விளையாட்டுக்கழகம் போன்று ஊர்கள்தோறும் விளையாட்டுக் கழகங்கள் உருவாகி இளையோரை அவர்கள் ஈர்த்தால் எதிர்காலத்திலாவது சிறந்த நிலையை அடையமுடியும், என நம்புகின்றேன்." – என்று ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டார்.

விளையாட்டுக்கழகத் தலைவர் கு.பாலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார் கலந்துகொண்டார்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு ஆளுநர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.





# குறுஞ்செய்தி கிடைத்தால் சூரிய மின்படலங்களை செயலிலிருந்து நீக்குமாறு மின்சார சபை கோரிக்கை



மின் அமைப்பின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் நோக்கில் இலங்கை மின்சார சபை வெளியிடும் குறுஞ்செய்தி கிடைக்கப்பெறும் பட்சத்தில் வீட்டின் கூரைகளில் உள்ள சூரிய மின் படலங்களை செயலிலிருந்து நீக்குமாறு மின்சார சபை கோரியுள்ளது.

அவ்வாறு குறுஞ்செய்தி கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் பிற்பகல் 3 மணி வரையில் சூரிய மின்படலங்களை செயலிலிருந்து நீக்குமாறு அனைத்து கூரை சூரிய மின்சக்தி படலங்களின் உரிமையாளர்களிடமும் மின்சார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த விடயத்தை தெளிவுபடுத்தும் வகையில் இலங்கை மின்சார சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இம்மாதம் 11 ஆம் திகதியிலிருந்து 13 ஆம் திகதி வரை அனல் மின் உற்பத்தி நிலையங்கள் பயன்படுத்தப்படவில்லை என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

பண்டிகைக்காலத்தில் மின்சார தேவை குறைவாக இருந்தமையை கருத்திற் கொண்டு சகல சூரிய மின்சக்தி படலங்களையும் செயலிலிருந்து நீக்குமாறு மின்சார சபை அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தது.

நீண்ட விடுமுறைக் காலத்தில் தேசிய மின்சார தேவையில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் அதிக சூரிய மின் உற்பத்தி காரணமாக, தேசிய மின்சாரக் கட்டமைப்பில் அழுத்தம் ஏற்பட்டுள்ளதால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

விடுமுறை காலம் என்பதால் பல தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்கள் குறைந்தளவில் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றன.

இதனால் அதிகளவில் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டால் அது அபாயத்தை ஏற்படுத்தும் என்பதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்ய நடவடிக்கை



மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருளைப் பயன்படுத்தும் சாரதிகளை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கையும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# இன்று வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்தில்

மனித உடலால் உணரக்கூடிய வெப்பநிலை இன்று எச்சரிக்கை மட்டத்திற்கு உயரக்கூடும் என வளிமண்டல வியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி, வடக்கு, வடமத்திய, வடமேல், மேல், தென் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டத்திலும் வெப்பநிலை உயரக் கூடும்.

கண்டி, கேகாலை, மாத்தளை, பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்க ளில் 39 பாகை செல்சியஸ் முதல் 45 பாகை செல்சியஸ் வரை வெப்பநிலை உயரக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.




# மட்டுப்படுத்தப்படும் கடவுச்சீட்டு விநியோகம்

கடவுச்சீட்டு வழங்குவதற்கான ஒரு நாள் மற்றும் சாதாரண சேவைகளுக் கான துண்டு சீட்டுகள் வழங்கும் பணிகள், நேற்று, இன்று மற்றும் நாளை ஆகிய நாள்களில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, இந்த சேவை மேற்படி நாள்களில் நண்பகல் 12 மணி வரை மாத் திரமே முன்னெடுக்கப்படும் என குடி வரவு மற்றும் குடியகல்வுத் திணைக் களம் தெரிவித்தது.

அதேநேரம், ஒரு நாள் சேவையின் கீழ் முன்னெடுக்கப்படும் 24 மணி நேரக் கடவுச்சீட்டு வழங்கும் சேவையானது இந்த மூன்று நாள்களிலும் இடம்பெறாது என வும் அந்த திணைக்களம் குறிப்பிட்டது.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## வவுனியாவில் நகரப் பள்ளிவாசலுக்கு முன் உள்ள நடைபாதை வியாபார நிலையங்கள் அகற்றப்படும்

### ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் கார்த்தீபன் உறுதி

(கி.வசந்தன்)

நாங்கள் வெற்றி பெற்றால் வவுனியா நகரப் பகுதிகளில் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள அனைத்து நடைபாதை வியாபார நிலையங்களும் அகற்றப்படும் என்று ஜனநாயக தேசிய கூட்டணியின் தபால் பெட்டிச் சின்னத்தில் போட்டியிடும் வவுனியா மாநகர சபை முதன்மை வேட்பாளர் ப.கார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் –

வவுனியா நகரப் பகுதிகளில் உள்ள நடைபாதை வியாபார நிலையங்களால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர். குறிப்பாக நடைபாதைகள் வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையால் பொதுமக்கள் பிரதான வீதிகளில் இறங்கியே பயணம் செய்கின்றனர்.



இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாவதுடன், போக்குவரத்து நெருக்கடி நிலையும் ஏற்ப்படுகின்றது.

வவுனியாவை பொறுத்த வரை இலுப்பையடிப்பகுதி, நகரபள்ளி வாசலுக்கு முன்பாகவுள்ள வீதி, வைத்திய சாலை வீதி ஆகியவற்றில் நடைபாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டு வியாபாரச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, இதற்கு மாற்றுத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அந்தவகையில் எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் நாம் வெற்றி பெற்று மாநகர சபையின் அதிகாரம் எமது கைகளுக்கு வழங்கப்பட்டால் நகரிலுள்ள அனைத்து நடைபாதை வியாபார நிலையங்களையும் நிச்சயமாக அகற்றுவோம்.

அதற்கு மாற்றீடாக பொருத்தமான இடம் ஒன்றைத் தெரிவுசெய்து அங்கு அந்த வியாபார நிலையங்களை அமைப்பதற்கான முறைமை ஒன்றையும் உருவாக்குவோம்.

வடக்கில் வேகமாக வளர்ச்சியடைந்து வரும் நகரமாக வவுனியா இருக்கின்ற போதும் உரியதிட்டமிடல் இன்மையால் நகரில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டு வருகின்றது. – எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் மீது தமிழரசுக் கட்சியினர் தாக்குதலாம்!

### ஜெகதீஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு






(கி.வசந்தன்)

தேசிய மக்கள் சக்தியின் மாந்தை மேற்கு ஆண்டான்குளம் வேட்பாளர் மீது மது போதையில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் உட்பட இணைந்த குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தேசிய மக்கள் சக்தின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:–

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டக்கண்டல் வேட்பாளர் உட்பட்ட சிலர் மாந்தை கிழக்கு ஆண்டான்குளம் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதல் நடத்தியவர்கள் அடம்பன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். எமது கட்சி வேட்பாளர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"ஜனாதிபதியின் கட்சியில் கேட்பவர் இவன்தான்!" எனக் கூறி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் சிராஸ்வா, டெனீஸ்வரன் ஆகியோர் தாக்குதல் நடத்தியவர்கள் சார்பாக ஆஜராகியுள்ளனர். தாக்குதல் நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். – எனவும் அவர் மேலும் தெவித்தார்.



# சம்மாந்துறையில் சலூனுக்குள் இருந்து சடலம் 3 நாள்களின் பின் கண்டுபிடிப்பு!






**(பாறுக் ஷிஹான்)**

சம்மாந்துறையில் மூன்று நாள்களுக்கு முன்னர் இறந்தவர் எனக் கருதப்படும் ஒருவரின் சடலத்தை அவரது சலூனில் கதிரை ஒன்றில் அமர்ந்த நிலையில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விளினையடி சந்தி பகுதியில் உள்ள சிகை அலங்கார கடையொன்றில் சடலம் இருப்பதாகப் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய நேற்று மாலை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமே கண்டுபிடிக்கப்பட்டது. உயிரிழந்தவர் வாடகைக் கடையில் சிகை அலங்கார கடை நடத்தி வந்தவர். மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பகுதியை சேர்ந்தவர் என்பது ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் இவர் சலூனுக்குளேயே வேலைகளை முடித்து கடையறைக்குள் இரவு தூக்கத்தை கழிப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில் மூன்று நாள்களுக்குப் பிறகு சடலம் மீட்கப்பட்டது. இது கொலையா அல்லது தற்கொலையா அல்லது இயற்கை மரணமா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அன்னை பூபதியின் நினைவேந்தல் ஏற்பாடு; மகள் காத்தான்குடிப் பொலிஸில் முறைப்பாடு

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு நாவலடியில் அமைந்துள்ள தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவேந்தலை வைத்து வெளிநாடுகளில் இருந்து பணத்தை பெற்று அதனை ஒரு அரசியலாக்கி நினைவேந்தலை செய்யவுள்ளனர் எனவும், அதனைத்தடைசெய்யுமாறும், 3 பேருக்கு எதிராக அன்னை பூபதியின் மகள் சாந்தி நேற்று செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளார் எனக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது:–

தியாக தீபம் அன்னை பூபதியின் 37 ஆவது நினைவேந்தல் எதிர்வரும் 19ஆம் திகதி அவரது சமாதியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் இந்த நினைவேந்தலை முன்னிட்டு மனித நேய செயற்பாட்டாளர்களான சிவயோகநாதன், செல்வகுமார், அரவிந்தன் ஆகியோர் நோர்வே நாட்டில் இருந்து தனது தாயாரின் பெயரை பாவித்து பணத்தை பெற்று விளையாட்டு போட்டிகள்மற்றும் அன்னையின் திருவுருவ படத்தை வாகனத்தில் வைத்து ஊர்வலமாக கொண்டு செல்வதற்கு திட்டமிட்டுள்ளனர் என்றும் –

அமைதியாகச் செய்ய வேண்டிய இந்த நினைவேந்தலை இவர்கள் அரசியலாக்கி இலாபமடையவுள்ளனர் என்றும் –

இவ்வாறு செய்வதை நான் விரும்பவில்லை. ஆகவே இந்த 3 பேரின் செயற்பாட்டை தடுத்து நிறுத்தி இவர்களை தடைசெய்து நான் அமைதியாக நினைவேந்தலை செய்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தித் தாருங்கள் என்றும் –

குறிப்பிட்டு அவர்களுக்கு எதிராக அன்னை பூபதியின் மகள் முறைப்பாடு செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



# ஒட்டுசுட்டானில் பனை, தென்னைவள கூட்டுறவுச் சங்க உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் சிக்கல் நிலைமை

## நேரில் ஆராய்ந்து தீர்வுகாண நடவடிக்கை மேற்கொண்டார் ரவிகரன் எம்.பி.

(பா.சதீசன்)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் சிக்கல் நிலையை எதிர்கொள்வதால், அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் பெரும் வாழ்வாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் ஒட்டுசுட்டான் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அழைப்பை ஏற்று நேற்று நிலமைகளை நேரில் சென்று ஆராய்ந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்,சங்கத்தில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு:-

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தமது விற்பனை நிலையங்களினூடாக தமது உற்பத்திகளை விற்பனை செய்வதில் பல இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவருவதாகவும், இதனால் தமது அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளமையுடன், அன்றாட வாழ்வாதாரத்திற்கு இடர்படும் நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிட்டுள்ளனர்.

இந் நிலையில் ஒட்டுசுட்டன் - கற்சிலைமடுப் பகுதியில் அமைந்துள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்திற்கு நேரடியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன்,சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடி சிக்கல் நிலமைகள் குறித்துக் கேட்டறிந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து சங்க நிர்வாகிகளை, ஒட்டுசுட்டான் பிரதேசசெயலகத்திற்கு அழைத்துச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், ஒட்டுசுட்டான் பிரதேசசெயலருடனும் கலந்துரையாடி, சங்கத்தினர் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.












# இரு வேறு விபத்துகளில் மூவர் பலி!

நாட்டின் இருவேறு பகுதிகளில் நேற்று இடம்பெற்ற விபத்துகளில் மூவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, நேற்று அதிகாலை, தம்புள்ளையிலிருந்து குருநாகல் நோக்கிச் சென்ற கப் வாகனம் ஒன்று எதிர்த் திசையில் வந்த ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் மீது மோதியது. இந்த விபத்தில் ஓட்டோச் சாரதியும், பின் இருக்கையில் அமர்ந்திருந்த ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் கல்கிரியாகம பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், 37 மற்றும் 43 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குக் காரணமான கப் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் அவர் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை தெரியவந்துள்ளது.

இதற்கிடையில், நேற்று அதிகாலை, காலி – மாத்தறை பிரதான வீதியில், காலியில் இருந்து மாத்தறை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் எதிர் திசையில் இருந்து வந்த காருடன் மோதியதில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், கொன்னகஹஹேன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர் மாத்தறை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேருக்கு நேர் மோதிய மோ. சைக்கிள்கள் இரு பெண்கள் உட்பட மூவருக்குக் காயம்

## வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் நேற்று மாலை சம்பவம்







**(கி.வசந்தன்)**

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, பூந்தோட்டம் பாடசாலை திசையில் இருந்து வவுனியா நகரம் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் எதிர் திசையில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இரு பெண்கள் மற்றும் இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தன் மீது வீண் பழி சுமத்துகின்றார்களே என்று கம்மன்பிலவிடம் கண்ணீர் விட்ட பிள்ளையான்



குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளில் போது தான் யார் மீதும் பழியைச் சுமத்தவில்லை அல்லது காட்டிக்கொடுப்புக்களைச் செய்யவில்லை என்றும் அப்படித் தான் செய்கிறார் எனச் சொல்லி பலர் கைது செய்யப்படவுள்ளனர் என சமூக ஊடகங்களில் வந்த செய்திகள் தவறானவை என்றும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவரை தடுப்புக் காவலுக்குச் சென்று பார்வையிட்ட சட்டத்தரணி உதய கம்மன்பிலவிடம் அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உதய கம்மன்பில பிள்ளையானை சந்திக்கும்போது அரசாங்கத்தின் பழிவாங்கல்கள் குறித்து பிள்ளையான் ஆழ்ந்த கவலையைக் கண்ணீருடன் வெளியிட்டு, இலங்கை ஆட்சியாளர்கள் தன்னை நன்றாகல் பயன்படுத்தி விட்டு இப்போது கைவிட்டு விட்டார்கள் என்றும் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகள் குறித்தும் இப்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் கம்மன்பிலவுக்கு விளக்கமளித்த பிள்ளையான் அரச சாட்சியாளராக மாறி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்குமாறு தமக்கு அழுத்தங்கள் வழங்கப்படுகின்றன எனவும் தெரிவித்திருக்கின்றார்.

கடத்தல் விவகாரம் தொடர்பில் தாம் கைது செய்யப்பட்ட போதிலும், இப்போது ஈஸ்டர் ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்தை தன்னுடன் கோர்ப்பதற்கு விசாரணையாளர்கள் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர் எனவும் உதய கம்மன்பிலவிடம் தெரிவித்திருக்கிறார்.

ஈஸ்டர் ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்ட போதும் அது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என கூறும் பிள்ளையான், இந்தச் சம்பவம் தொடர்பில் தான் சிலரை காட்டிக் கொடுத்துவிட்டார் எனவும், இதனால் சிலர் கைது செய்யப்படவுள்ளனர் எனவும் வெளிவந்துள்ள தகவல்களை முற்றுமுழுதாக இதன்போது நிராகரித்துள்ளார்.

அரசாங்கத்தின் விசாரணைகள் அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்படுகின்றன எனவும், போர்க் காலத்தில் தன்னை நன்கு பயன்படுத்திய இதே தரப்பினர், தற்போது அரசியல் காரணங்களுக்காக தன்னை பழிவாங்குகின்றனர் எனவும் இது தொடர்பில் ஜனநாயகத்தை விரும்பும் தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது விசாரணை அறையில் உறங்குவதற்கு கூட ஒழுங்கான வசதிகள் இல்லை என்றும், தரையில் படுத்து உறங்க வேண்டிய நிலை இருப்பதாகவும் உதய கம்மன்பிலவிடம் சுட்டிக்காட்டிய போது அங்கு பாதுகாப்புக்கு நின்றிருந்த பொலிஸாரை இந்த விடயத்தில் கடிந்துகொண்ட கம்மன்பில்ல உள்நாட்டு போரை முடிவுக்குக் கொண்டு வர உதவிய பிள்ளையானுக்கு இப்படியான அநீதிகளை செய்வது நியாயமா? இப்படியானவருக்கு படுக்கை வசதி கூட செய்யாமல் இருப்பது மோசமான நடவடிக்கை இல்லையா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த விவகாரம் குறித்து பிள்ளையானிடம் கேட்டறிந்து கொண்ட உதய கம்மன்பில இது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

பிள்ளையானின் சட்டத்தரணி என்றவகையில் அவரை அடிக்கடி பார்த்து நீதிமன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான திட்டங்களை வகுத்துள்ளார் என இதன்போது கம்மன்பில உறுதியாகத் தெரிவித்துள்ளார் என அறிய முடிகிறது.

# பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரின் சாரதி சென்ற வாகனம் கோர விபத்தில்

## கணவன் - மனைவி பலி; 2 பிள்ளைகள் படுகாயம்





அநுராதபுரம் – குருநாகல் பாதையில் நடந்த கோர விபத்தில் பொது பாதுகாப்பு அமைச்சரின் சாரதி மற்றும் அவரது மனைவி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து புதுவருடத்துக்கு முதல் நாள் 13ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனத்தின் சாரதியான டொன் அஜித் பிரியந்த, அவரது மனைவி மற்றும் அவர்களது இரு குழந்தைகளுடன் அநுராதபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட தூக்கமே விபத்துக்கான காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் சாரதி மற்றும் அவரது மனைவியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த இரு குழந்தைகளும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மகன் பலத்த காயங்களுடன் தற்போது பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மகள் அம்பன்போல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# செட்டியார் தெரு ஸ்ரீமுத்து விநாயகர் தேர்



கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீ முத்து விநாயகர் சுவாமி திருக்கோயில் வருடாந்த மஹோற்சவ சித்திரை தேர்த்திருவிழா புதுவருடப் பிறப்பன்று சிறப்பாக நடைபெற்றது. முத்து விநாயகர், பஞ்சமுக விநாயகர், சண்டேஸ்வரர் செட்டியார் தெரு வழியாக வீதிவலம் வரும் காட்சியை காணலாம்.















# தி.மு.க. பிரிவினைவாத மனப்பான்மையுடன் செயல்படுகிறது; பா.ஜ.க.தலைவர் குற்றச்சாட்டு

“தி.மு.க. அரசு மாநிலங்களை பிரிக்க வேண்டும் என்ற, பிரிவினை வாதத்துடன் செயல்படுகிறது எனவும் இந்தியா ஒற்றுமையாக இருக்க வேண்டும் என அவர்கள் நினைக்கவில்லை என்றும் பா.ஜ.க.தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் மாநில சுயாட்சி தீர்மானம் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. முதல்வர் மு.க ஸ்டாலின் இந்த தீர்மானத்தை தாக்கல் செய்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, சட்டப் பேரவையில் இருந்து பா.ஜ.க. வெளி நடப்பு செய்தது.

பின்னர் இது குறித்து நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களுக்கு அளித்தப் பேட்டியில்,

“பொன்முடியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும். யாரெல்லாம் பெண்களை பற்றி கேவலமாக பேசு கிறார்களா, அவர்கள் மீது நடவடிக்கை



எடுக்க வேண்டும்.

தெலுங்கு, மலையாளம் பேசுபவர்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள். மும்மொழிக் கொள்கையில் இந்தி மொழி திணிக்கப்படவில்லை. மாணவர்கள் விருப்ப மொழியை தேர்வு செய்து படிக்கலாம் என கூறப்படுகிறது. தி.மு.க. அரசு மாநிலங்களை பிரிக்க வேண்டும் என்ற, பிரிவினை வாதத்துடன் செயல்படுகிறது. இந்தியா ஒற்றுமையாக இருக்க வேண்டும் என அவர்கள் நினைக்கவில்லை. தனி தமிழ்நாடு, தனி கொடி வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் நினைக்கிறார்.

நாடு வல்லரசாக மாற வேண்டும் என்றால், எல்லா மாநிலங்களும் ஒன்றாக தான் இருக்க வேண்டும். எல்லாம் மாநிலங்களும் ஒன்றாக இருந்தால் தான், நாடு வளர்ச்சி அடைய முடியும் என்று அம்பேத்கர் கூறினார். இந்திய நாடு பல மாநிலங்களாக பிரிக்கப்பட்டதற்கான காரணமே, நிர்வாக வசதி சீராக இருக்க வேண்டும் என்பதற்காக தான்.

ஆனால் தேர்தலை முன்னிறுத்தி எதாவது தீர்மானத்தை கொண்டுவர வேண்டும் என அவர்கள் நினைக்கிறார்கள். இது மக்களுக்கும், தேசத்துக்கும் விரோதமானது. மக்கள் இதை சிந்தித்து, தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும். இனி தி.மு.க. ஆட்சி தொடர வாய்ப்பே இல்லை.” – என்றார்.



# வெப்ப பாதிப்பால் உயிரிழந்தால் இனி 4 லட்சம் ரூபா நிவாரண நிதி

## தெலுங்கானா அரசு அறிவிப்பு

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் வெப்ப அலை மற்றும் வெயில் தாக்க பாதிப்புகளை மாநிலத்தின் குறிப்பிட்ட பேரிடராக அறிவித்து தெலுங்கானா அரசு இன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தப் புதிய உத்தரவின்படி, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்துக்கு 4 லட்சம் இந்திய ரூபா நிவாரணம் கிடைக்கும்.

இது குறித்து தெலுங்கானா அரசு வெளியிட்டுள்ள உத்தரவில்,

“மதிப்பீட்டு சிக்கல்கள் காரணமாக வெப்ப அலை பாதிப்புகள் ஒரு மறைமுகமான ஆபத்தாகவே அறியப்படுகிறது. அதன் பாதிப்புகளும் குறைவாகவே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வெப்ப அலைகளின் தாக்கம் மற்றும் இறப்புகள் குறித்து மிகவும் குறைவான அளவிலேயே தகவல்கள் உள்ளன. அதிலும் குறிப்பாக மிகவும் பாதிக்கப் படக்கூடிய மக்கள் பிரிவினர்களான பெண்கள், குழந்தைகள், வயோதிகர்கள் பற்றிய தகவல்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்கும் வகையில் இனிமேல் வெப்ப அலை, வெயில் தாக்கப் பாதிப்புகளை மாநிலத்தின் குறிப்பிட்ட பேரிடர் என்று அறிவிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. தெலங்கானாவில் உள்ள 5 மாவட்டங்களைத் தவிர, மீதமுள்ள 28 மாவட்டங்களில் குறைந்தது 15 நாட்களுக்கு வெப்ப அலை நிலவும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நிவாரணத் தொகை எதுவும் இல்லாததால், வெப்ப அலைகளால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாநில அரசு ஆபத்பந்து திட்டத்தின் கீழ் 50,000 இந்திய ரூபா மட்டுமே நிவாரணம் வழங்கி வந்தது. மாநிலத்தில் நிலவும் அதிக வெப்பநிலை மற்றும் நியாயமான முறையில் ஹைபர்தேமியாவுக்கான பிற காரணங்கள் இல்லாமல், வெப்ப அலை தொடர்பான மரணங்களை உரிய அதிகாரிகளைக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டும்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய உத்தரவின்படி, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்துக்கு 4 லட்சம் இந்திய ரூபா நிவாரணம் கிடைக்கும்.



# 6 வார போர் நிறுத்தத்திற்கான இஸ்ரேலிய முன்மொழிவை நிராகரித்தது ஹமாஸ்

காசாவில் ஆறு வார போர் நிறுத்தத்திற்கான இஸ்ரேலிய முன்மொழிவை ஹமாஸ் நிராகரித்ததாகக் கூறப்படுகிறது.

இந்தத் திட்டம் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கோ அல்லது இஸ்ரேலிய துருப்புக்களை வெளியேற்றுவதற்கோ எந்த உறுதிமொழியையும் அளிக்கவில்லை என ஹமாஸ் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. காசாவில் இஸ்ரேல் தனது இராணுவத் தாக்குதலைத் தொடர்ந்து வரும் நிலையில் போர் நிறுத்தத்தை முன்மொழிந்துள்ளது.

# ஹார்வர்ட் பல்கலைக்கழகத்துக்கான நிதியை முடக்கியது ட்ரம்ப் நிர்வாகம்






அமெரிக்காவில் உள்ள உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றான ஹார்வர்ட் பல்கலைக்கழகத்துக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலரை முடக்குவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது.

வெள்ளை மாளிகையின் நிபந்தனை பட்டியலை மேற்படி பல்கலைக்கழகம் நிராகரித்த சில மணி நேரங்களின் பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யூத எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பட்டியலிடுமாறு வெள்ளை மாளிகை கடந்த வாரம் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திடம் கோரியிருந்தது.

இந்த பட்டியலில் மாணவர்களை உள்வாங்குதல், மற்றும் கற்பித்தல் ஆகியவற்றில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் குறித்தும் கோரப்பட்டிருந்தது.

# மலேஷியாவின் முன்னாள் பிரதமர் அஹமட் பட்டாவி காலமானார்

மலேசியாவின் முன்னாள் பிரதமர் அப்துல்லா அஹமட் பட்டாவி தனது 85 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

22 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த மஹதிர் மொஹமட் இராஜினாமா செய்ததையடுத்து 2003 ஆம் ஆண்டு இவர் பதவியேற்றார்.



6 ஆண்டுகள் பிரதமராகப் பணியாற்றிய அப்துல்லா அகமது பட்டாவி மலேசியாவின் விவசாயத் துறையை மேம்படுத்துவதில் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தலைவராவார்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.04.2025



## மேஷம்

உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



## ரிஷபம்

இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.

நேர்மறையான எண்ணம் மற்றும் திட்டமிடல் மூலம் இன்று பதட்டமின்றி இருக்கலாம்.



## மிதுனம்

உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.



## கடகம்

இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.



## சிம்மம்

இன்று காணப்படும் சிறிய பிரச்சனைகளை கையாள கடின முயற்சி தேவை.

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.



## கன்னி

இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.



## துலாம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.



## விருச்சிகம்

இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் ஃ மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

இன்று எண்ணெய் பதார்த்தங்களை உண்ண வேண்டாம். அது உங்கள் தோலை பாதிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.04.2025

## தனுசு

இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.

## கும்பம்

உங்கள் மனதில் சில இலக்குகளைக் கொண்டிருப்பீர்கள். அவைகளை செயலாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும்.

## மகரம்

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை. இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## மீனம்

நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

# வவுனியா வைத்தியசாலைப் பிணவறை குளிரூட்டி பழுது; நிர்வாகம் மிக அலட்சியமாக இருந்ததாகக் குற்றச்சாட்டு




**(கி.வசந்தன்)**

வவுனியா வைத்தியசாலையின் பிண அறையின் குளிரூட்டி கடந்த இரு வாரங்களாக பழுதடைந்துள்ள நிலையில் அதனை சீரமைப்பதில் வைத்தியசாலை நிர்வாகம் அலட்சியமாக இருந்துள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

குளிரூட்டி இயங்காமையினால் வவுனியாவில் உயிரிழப்பவர்களின் சடலங்கள் செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலைக்கு தொடர்ச்சியாக அனுப்பப்பட்டு வருகின்றன. இதனால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

குளிரூட்டியைத் திருத்துவதற்கான முயற்சிகள் வைத்தியசாலை நிர்வாகத்தால் முன்னெடுக்கப்பட்டன எனக் கூறப்படுகின்ற போதும் அது வெற்றியளிக்கவில்லை எனவுன் தெரிவிக்கப்படுகின்றது. வவுனியா வைத்திய சாலையில் இருந்து தமது சொந்தச் செலவில் வாகனத்தை வாடகைக்கு அமர்த்தியே செட்டிகுளம் வைத்திய சாலைக்கு இறந்தவர்களின் உறவினர்கள் சடலங்களை கொண்டு செல்ல வேண்டியுள்ளதுடன், மீண்டும் சொந்த செலவில் அங்கிருந்து பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்திய சாலைக்கு கொண்டு வரவேண்டியுள்ளது.

இது தொடர்பில் வவுனியா வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் வைத்தியசாலை நலன்புரிச் சங்கம் என்பன கவனம் செலுத்தவில்லை என பொது மக்களால் குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

இதன்காரணமாக இறந்தவர்களின் உடலங்களை பெற்றுக்கொள்வதில காலதாமதம் ஏற்படுவதாகவும், பலரும் சடலங்களை கொண்டு செல்வதற்கு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்குரிய பொருளாதார நிலைமை இன்மையால் அவதிப்படுகின்றனர் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.